## இலங்கை போக்குவரத்துச் சபை – 2016

இலங்கை போக்குவரத்து சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துதல் எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில், அகல் விரிவான வருமானங்கள் மற்றும் செலவுகள் கூற்றில் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலகதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நிச்சயிக்க முடியாதுள்ளளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிறுவனத்தின் இடையறாமல் நீடித்தல்

சபை தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தமையால் தேறிய சொத்துக்கள் பாரிய அளவில் பாதிப்பிற்கு ஆளாகியிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதி அளவில் தேறிய சொத்துக்கள் ரூபா 20,851,282,909 இற்கான மறை பெறுமதியொன்றாக இருந்ததுடன் அதன் காரணமாக திறைசேரியின் அல்லது அரசின் நிதி உதவிகள் இன்றி நிறுவனத்தை இடையறாது நடாத்திச் செல்லல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மையொன்று ஏற்படக் கூடும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.
மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி நிலைமையை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைமுறைப் பொறுப்புக்களை மேவுகை செய்வதற்காக காணப்படும் நடைமுறைச் சொத்துக்களின் தொகை மொத்த நடைமுறைப் பொறுப்புக்களில் சராசரியாக 32 சதவீதத்தை விட மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 2016 ஆண்டின் போது இம்மட்டம் 49 சதவீதமாக இருந்தது. செலுத்த வேண்டிய பணத்தை உரிய முறைப்படி செலுத்தாமை, அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்காமை மற்றும் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் முன்கொண்டுவரப்படுகின்ற மீதிகள் இந் நிலைமை ஏற்படுவதற்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(i) நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களைப் பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு ஆக்கிய சந்தர்ப்பம் முதல் பயன்தரு ஆயட்காலம் பூராகவும் முறையான அடிப்படையில் பெறுமானத்தேய்வு கழிக்க வேண்டிய போதிலும் சபை கொள்வனவு செய்து பயன்படுத்தியிருந்த ரூபா 81,415,892 பெறுமதியான சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையின் பேரூந்து தொகுதியில் மீளாய்வாண்டு வரையில் ரூபா 1,367,754,792 தொகையான பேரூந்து வண்டிகள் செயலிழந்து காணப்பட்டதுடன் அந்த பேரூந்து வண்டிகளின் பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 1,370,972,541 ஆக இருந்தது. இந்த பேரூந்து வண்டிகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், நிதிநிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. செயலிழந்த பேரூந்துகளின் கிரயத்தை விஞ்சி ரூபா 3,217,749 பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது ரூபா 1,041,195 பெறுமதியான வாகனங்கள் செயலிழந்திருந்த போதிலும், அந்த செயலிழந்த வாகனங்களுக்காக ரூபா 520,385 தொகையான பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதிநிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) நியமத்தின் 58 ஆம் பந்தியின் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை வெவ்வேறாக இனங்கண்டு கணக்கீடு செய்யவேண்டுமெனினும் நியமத்திற்கு முரணாக காணிகள் மற்றும் கட்டிடங்கள் என ரூபா 319,799,318 மொத்தப் பெறுமதியில் 50 சதவீதம் என கணித்து அப் பெறுமதியின் மீது 2.5 சதவீதம் வருடாந்தப் பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்டிருந்தமையால் 2016 திசெம்பர் 31 அளவில் கட்டிடங்களின் கிரயத்தை மிகைத்து ரூபா 1,005,499 தொகை பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 17**

---

(i) நியமத்தின் 31(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குத்தகை பொறுப்புக்கள் காட்டப்படும் போது அந்தக் குத்தகைச் சொத்துக்களின் நியாயமான பெறுமதி அல்லது செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தவணைகளின் தற்போதைய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதி காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் குத்தகை நிதிப் பெறுமதி மீது, வட்டித்தொகை தவணைத் தொகை கூட்டிய முறை (Sum of digit method) மீது கணித்து ரூபா 7,383,195,074 தொகை குத்தகைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ii) குத்தகை தொடர்பாக பின்வரும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- காலப்பகுதி இறுதியில் உள்ளவாறு குறைந்த குத்தகை தவணைப்பணம் மற்றும் அதனது தற்போதைய பெறுமதியினை இணக்கஞ் செய்தல்.

- ஒரு வருடத்திற்கு குறைவில்லாத காலமொன்றிற்கு, வருடத்திற்கு மிகையான மற்றும் 05 வருடங்களை விட குறைவான மற்றும் 05 வருடங்களை விட கூடிய காலப்பகுதி தொடர்பாக கணக்கு காலப்பகுதி இறுதியில் காணப்பட்ட எதிர்கால குத்தகை தவணைகளின் கூட்டுத்தொகை மற்றும் அவற்றின் தற்போதைய பெறுமதியின் கூட்டுத்தொகை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

---

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் பின்னைய ஊழியர் நலன்களின் பெறுப்புக்கள் எதிர்வு கூறிய அலகு செலவு முறைமை பயன்படுத்தப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக ஒவ்வொரு தரத்தில் மத்தியிலுள்ள சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் மேலதிகப் படி சேர்த்து உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினால் பெருக்குவதன் மூலம் மொத்த பணிக்கொடை ஏற்பாட்டுத் தொகை கணிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்கீட்டுக் கொள்கை**

---

நிறுவனத்தால் கணனி மென்பொருள் கற்பனைச் சொத்தாக இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9,510,486 பெறுமதியான மென்பொருளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 2,377,621 தொகையான பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பேருந்து அலுவலகத்தில், கடை வாடகை வருமானம், மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல் கட்டணங்கள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 3,199,955 தொகையான நிலுவை கடை வாடகை வருமானம் மற்றும் ரூபா 773,967 தொகையான நிலுவை மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல் கட்டண வருமானம் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 147,965 தொகையான வங்கிக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான அலுவலகக் களஞ்சிய மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா 1,107,267 தொகையான பிரயாணிகள் டிக்கட் புத்தகம், சிரேஷ்ட பிரஜைகள் கூப்பன் பத்திரம் உள்ளடங்கலாக 11 களஞ்சிய விடயங்கள், பாவனைக்கு எடுக்க முடியாதிருந்ததுடன் அதில் அப்பெறுமதியை இருப்பிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இருப்பின் பெறுமதி அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உடுகம டிப்போவிற்குரிய வங்கி நடைமுறைக் கணக்கிற்கு நேரடியாகக் கிடைத்த சிசுசெரிய மற்றும் நிசிசெரிய வருமானம் முறையே ரூபா 378,072 மற்றும் ரூபா 793,164 தொகைகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஹொரவப்பொத்தானை புதிய டிப்போவின் கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 32,436,777 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது 2012 யூன் 11 ஆந் திகதி முதல் பாவனைக்கு எடுத்திருக்கும் போது அந்த செலவிடப்பட்ட தொகை தொடர்ந்தும் நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டிடத்தின் பெறுமானத்தேய்வுப் பெறுமதியும் ரூபா 810,919 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 390,910 தொகையான தொங்கல் கணக்கு மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக அவற்றை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | செயற்பாடற்ற கணக்குகள் - வரவு | 9,935,459,128 | காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| | - செலவு | 26,054,954,882 | |
| (ii) | இலங்கை வங்கியின் | 6,905,000 | வைப்புச் சான்றிதழ் |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான வைப்பு | | |
| (iii) | காசு மீதி | 1,856,558,905 | டிப்போ ரீதியில் வேறுபடுத்தப்பட்ட விரிவான பட்டோலை மற்றும் மீதி உறுதிப்படுத்தல் |
| (iv) | வங்கி மேலதிகப்பற்று | 889,251,471 | |
| (v) | வியாபாரக் கடன்கொடுத்தோர் | 2,434,887,483 | |
| (vi) | ஏனைய கடன்கொடுத்தோர் | 137,398,234 | |
| (vii) | காசாளர் நிலுவை மீதி | 34,776,498 | |
| (viii) | நடத்துனர் ஒழுங்கீனங்கள் மீதி | 11,595,695 | |
| (ix) | பலவின கடன்பட்டோர் | 101,155,750 | விரிவான பட்டோலை, காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல் |
| (x) | பெற வேண்டிய வருமானங்கள் | 233,785,840 | |
| (xi) | வியாபாரக் கடன்பட்டோர் மீதி | 19,632,110 | பட்டோலை |
| (xii) | சேமிப்புக் கணக்குகள் | 31,297,381 | 11 கணக்குகளுக்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| (xiii) | காணிகள் மற்றும் கட்டிடங்கள் | 319,799,318 | சொத்தக்கள் பதிவேடு, விரிவான பட்டோலை மற்றும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை |
| (xiv) | இருப்பு | 817,776,589 | விரிவான இருப்பு அறிக்கை |
| (xv) | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் | 7,138,279 | விரிவான பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (xvi) | மூன்றாம் தரப்பினருக்கான கொடுப்பனவுகள் (சம்பள மேவுகை) | 49,013,863 | |

**2.2.7 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய சேமலாப நிதியப் பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டணம் ரூபா 3,720,781,715 ஆக இருந்த போதிலும், ஊழியர் சேமலாப நிதியத்தின் பிரகாரம் அறவிட வேண்டிய மீதி ரூபா 5,343,474,711 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,622,692,996 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பேரூந்து அலுவலகத்தில் நிலுவைக் கடை வாடகை வருமானமாக 2009 ஆம் ஆண்டு முதல் ரூபா 1,863,414 தொகையும், 2014 ஆம் ஆண்டு முதல் ரூபா 5,368,009 தொகையும் அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான அலுவலகத்தில் அறவிட வேண்டிய அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 142,466,102 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 12,783,486 தொகை வருடமொன்றிற்கு மேற்பட்டதாக இருந்தது. சபை இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கொள்வனவு முற்பணக் கணக்கில் தீர்க்கப்படாத மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,635,847,558 இனால் ரூபா 1,633,859,392 தொகை அதாவது 99 சதவீதம் 01 வருடம் முதல் 03 வருட காலவீச்சில் பெறப்பட்டு தீர்க்கப்படாத முற்பணமாக இருந்ததுடன் 40 சதவீதம் அதாவது ரூபா 649,682,474 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது பதுளை மற்றும் பண்டாரவெல டிப்போக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமான மீதி முறையே ரூபா 2,917,799 தொகை மற்றும் ரூபா 2,415,070 ஆகக் காணப்பட்டதுடன் இந்தப் பணம் குறித்த காலத்தில் அறவிடப்படாமல் காணப்பட்டது.

(உ) நிதிநிலைமைக் கூற்றில் ரூபா 233,785,840 தொகையான பெறவேண்டிய வருமான மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 187,514,112 தொகையான பெறவேண்டிய சேமலாப நிதியக் கடனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கொழும்பு பிரதேச அலுவலகம், பலாங்கொடை மற்றும் அவிஸ்ஸாவெல்ல டிப்போக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 29,109,121 தொகையான பெறவேண்டிய வருமானம் 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

(எ) 2012 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற தம்புள்ளை மற்றும் மொனராகலை டிப்போக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் முறையே ரூபா 3,609,145 தொகை மற்றும் ரூபா 11,076,232 தொகைகள் தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்டது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்களினதும் திறைசேரி உண்டியல்களினதும் கூட்டுப்பெறுமதி ரூபா 479,094,484 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் என்பன பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1981 இன் 26 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு | ஒவ்வொரு மாதத்தினதும் பங்களிப்புப் பணம் அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பிரதான அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களின் உத்தியோகத்தர்களுக்கான பங்களிப்புப் பணம் என்பன உரிய பிரகாரம் செலுத்தாமையினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,576,839,351 தொகையான செலுத்த வேண்டிய மீதி காணப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப்பிரமாணம் 395(ஆ) | மீளாய்வாண்டின் போது சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற 62 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கி இணக்கக் கூற்று அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 395(உ) | 03 வங்கிக் கணக்குகளில் கூட்டுமொத்தமாக ரூபா 9,179,791 தொகை வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் மற்றும் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் தேறாத காசோலைகள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 396(ஏ) | உத்தியோகத்தர்களுக்கு கடமைகளைக் கையளிக்கும் போது காசேட்டைத் தயாரித்தலுடன் தொடர்பில்லாத நபருக்கு வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கும் பணி கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் வங்கிக் கணக்குகளினது வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கும் பணி காசேட்டை பேணிச் செல்லுகின்ற உத்தியோகத்தருக்கே கையளிக்கப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 14 வங்கிக் கணக்குகளுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களைக் கடந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 5,029,620 தொகையான 67 காசோலைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் கையேடு | மீளாய்வாண்டின் போது ரூபா 775,655,613 பெறுமதியான டயர் பெறுகைகள்<br>------------------------------------------------------------------------------- |
| (i) | 4.2.3 ஆம் பிரிவு | முழுமையான பெறுகை நடைமுறைகளை உள்ளடக்கும் வகையில் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 5.3.11 ஆம் பிரிவு | கேள்வி செல்லுபடிக்காலம் முடிவடைந்த திகதியிலிருந்து மேலும் 14 நாட்கள் கேள்விக் காப்பீட்டுக் காலம் அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 5.4.8 ஆம் பிரிவு | பொருள் வழங்குதலை பூர்த்தி செய்வதற்கு குறித்த திகதியிலிருந்து 28 நாட்கள் வரை செயலாற்றல் பிணை செல்லுபடியாக இருக்க வேண்டியிருந்த போதிலும் அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 6.3.3 ஆம் பிரிவு | கேள்வி திறத்தல் செயல்நடைமுறைகளின் பிரகாரம் கேள்விப் பிணை சான்றிதழில் சிற்றொப்பம் இட்டு கேள்வி திறத்தல் குழுவின் சகல அங்கத்தவர்களினாலும் நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| | | வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 7.4 ஆம் பிரிவு | கேள்வியின் செல்லுபடிக் காலத்தில் ஐம்பது சதவீத காலத்திற்குள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்வி மதிப்பீட்டு அறிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிராமை. |
| | | மீளாய்வாண்டின் போது ரூபா 52,759,716 பெறுமதியான ''துணுகொல'' பெறுகை |
| (i) | 5.3.2. ஆம் பிரிவு | பெறுகை அறிவித்தலில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படையான முக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 5.4.8 ஆம் பிரிவு | பொருட்கள் வழங்குதல் பூர்த்தி செய்வதற்கு குறிக்கப்பட்ட திகதியின் பின்னர் 28 நாட்கள் வரை செயலாற்றல் பிணை செல்லுபடியாக வேண்டிய போதிலும், அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 29,063,501,009 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் சபைக்குச் சொந்தமாக இருந்த போதிலும், அந்த சகல சொத்துக்களையும் உள்ளடக்கும் வகையில் நிலையான சொத்துப் பதிவேடொன்று நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | மத்திய பேரூந்து நிலைய கடை வாடகை உடன்படிக்கை இலக்கம் 05, 14, 08, 09 ஆம் பிரிவுகள் | நீர்க்கட்டண பட்டியல், மின்சாரப் பட்டியல் என்பன உரிய பிரகாரம் செலுத்தப்பட்டிராமை. |
| (எ) | சபையும் சியட் கம்பனியும் கைச்சாத்திட்ட டயர் பெறுகை தொடர்பான உடன்படிக்கை | |
| (i) | நிபந்தனை இல. 7.2 | கட்டளையிடப்பட்டு ஒரு வாரத்திற்குள் கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு கையளிக்கப்படாதிருந்த டயர் தாமதக் காலம் 16 நாட்கள் முதல் 180 நாட்கள் வரையிலான காலவீச்சினைக் கொண்டிருந்தது. |
| (ii) | நிபந்தனை இல. 8 | நிபந்தனைகளின் பிரகாரம் கட்டளையிடப்பட்ட பொருட்கள் உரிய பிரகாரம் வழங்கப்படாமையினால் அதன் பிரகாரம் தாமத வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 902 ஆம் இலக்க உறுதிச்சீட்டு மூலம் 04 கட்டளைகளுக்காக ரூபா 734,751 தாமத வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(iii) நிபந்தனை இல. 10.4/ 10.5 — புதிய டயர் செயற்படுநிலை அறிக்கையின் பிரகாரம் ஓடப்பட வேண்டிய கிலோமீற்றர் எண்ணிக்கையை விட குறைவாக ஓடியிருந்ததுடன் அது தொடர்பாக நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 632,619,173 பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 751,260,743 தொகை ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 118,641,570 இனால் குறைவடைந்திருந்தது. சபையின் வருமானம் ரூபா 3,638,684,574 இனால் அதிகரித்து அரசாங்கத்தின் மானியம் ரூபா 342,896,380 இனால் அதிகரித்தமையும் மேற்கூறிய பற்றாக்குறை குறைவடைந்தமை தொடர்பில் பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை சபையின் பற்றாக்குறை படிப்படியாக குறைவடைந்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது சபையின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் போது அதிகரித்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போதான ரூபா 12,709,377,743 தொகையான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 19,538,760,465 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

2016 ஆண்டிற்கான சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பான கூட்டிணைந்த திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத்திட்டம், முன்னேற்ற அறிக்கை மற்றும் பாதீட்டின் படி மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை சட்டத்தின் பிரகாரம் சபைக்குரிய அதிகாரத்தின் பிரகாரம் செயற்படுத்தக் கூடிய பின்வரும் விடயங்கள் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

- சபையினால் வீதிப் பயணிகளுக்காக பஸ் தரிப்பிடங்களும் மறைப்புக்களும் வழங்குதல்
- நடைமுறைச் சாத்தியமற்ற மற்றும் கடினமானவை என சபையினால் கவனம் செலுத்திய பாதைகளில் போதியளவு பஸ் சேவைகள் வழங்குவதல்.
- சபைக்கு சொந்தமான பஸ் தரிப்பிடங்களை வழங்குதல் மற்றும் பேணல்.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கிலோ மீற்றருக்கு வீதிநிரல் வருமானம் ரூபா 65.5 மில்லியனை உழைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் உள்ளபடியாக ஒரு கிலோமீற்றருக்கு வீதி நிரல் வருமானம் ரூபா 57.59 மில்லியன் மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட வருமானத்தில் ரூபா 7.91 மில்லியன் வருமானத்தை அடைவதற்கு முடியாதிருந்தது.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட சராசரி வீதி நிரல் வருமானம் ரூபா 87.06 மில்லியனாக இருந்த போதும், ஆண்டின் போது உள்ளபடியாக நாளொன்றிற்கு உழைக்கப்பட்ட சராசரி வீதி நிரல் வருமானம் ரூபா 71.08 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் ரூபா 15.98 மில்லியன் இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) முற்றாக பழுதுபார்க்க வேண்டிய பஸ் வண்டிகள் மற்றும் நாளாந்தம் ஏற்படுகின்ற சிறிய அளவினை பழுதுபார்த்தல்களின் காரணத்தினால் ஓட்டத்தில் இருந்து வெளியேற்றப்படும் பஸ் வண்டிகளைப் பழுதுபார்த்து ஓட்ட நிலைக்கு சேர்த்தல் இலக்காக இருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மொத்த பஸ் வண்டித் தொகுதி 7,768 எனினும் பின்வரும் காரணங்களினால் அந்தப் பஸ் தொகுதியில் பஸ் வண்டிகள் 1,564 தொகை அதாவது சுமார் 20 சதவீதம் ஓட்டுவதற்கு இயலாத நிலைமையில் காணப்பட்டது.

| **விபரம்** | **ஓடப்படாத பேரூந்து வண்டிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| டயர், டியூப் மற்றும் பற்றரி இன்மையால் நிறுத்தப்பட்ட பஸ் வண்டிகள் | 111 |
| தொகுதிகள், உப தொகுதிகள் இன்மையால் நிறுத்தப்பட்ட பஸ் வண்டிகள் | 424 |
| பரிசோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பஸ் வண்டிகள் | 85 |
| அவசர விபத்துக்கள் காரணமாக பழுதுபார்த்தலில் காணப்படும் பஸ் வண்டிகள் | 55 |
| ஓடும் போது ஏற்படும் சிறிய தொழிநுட்ப கோளாறுகள் காரணமாகப் பழுதுபார்த்தலில் காணப்படும் பஸ் வண்டிகள் | 218 |
| தொகுதிகள் பழுதுபார்த்தலில் காணப்படும் பஸ் வண்டிகள் | 254 |
| பாரிய பழுதுபார்த்தல் வேலைக்காக நிறுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகள் | 306 |
| பழுதுபார்த்தலின் மூலம் பொருளாதார நலன் கிடைக்காத பஸ் வண்டிகள் | 111 |
| மொத்தக் கூட்டுத்தொகை | 1,564 |

பஸ் வண்டிகளில் 535 எண்ணிக்கையான டயர், டியூப் மற்றும் தொகுதிகள் இன்மையினால் ஓடுவதில் ஈடுபடுத்தியிருக்கவில்லை. அதே போல் அந்த பஸ் வண்டித் தொகுதியில் 1008 எண்ணிக்கை 15 வருடங்களை விடப் பழமையான பஸ் வண்டிகளாகும்.

(ஈ) சபையின் 2016 ஆம் ஆண்டில் ஓட்டத்திற்கு வழங்கப்பட்ட பேருந்து வண்டிகளுக்குத் தேவையான சாரதிகளின் எண்ணிக்கை (பணிகளின் பிரகாரம்) 9,192 ஆகவும் நடத்துனர் எண்ணிக்கை 9,192 ஆகவும் இருந்தன. உள்ளபடியாக இருக்கின்ற சாரதிகளின் எண்ணிக்கை 9,954 ஆகவும் நடத்துநர்களின் எண்ணிக்கை 9,628 ஆகவும் காணப்பட்டன. அதன் பிரகாரம் ஓட்டத்திற்கு வழங்கப்பட்ட பேருந்துகளுக்குத் தேவையான சாரதிகளின் எண்ணிக்கை 762 உம், நடத்துனர்களின் எண்ணிக்கை 436 உம் மிகையாக இருக்கின்றமை அவதானிக்கப்பட்ட போதும், பிரதேசத்திற்கும் டிப்போக்களுக்கும் இடையே ஒதுக்கலின் முரண்பாடுகளின் காரணமாக சில பிரதேசங்களிலும் டிப்போக்களிலும் மற்றும் சாரதிகளிலும் நடத்துனர்களிலும் பற்றாக்குறையும் மிகையும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டன.

(உ) திறைசேரியின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் பஸ் வண்டிகளை புனர்நிர்மாணம் செய்து வாகனத் தொகுதியில் சேர்க்கும் செயற்திட்டத்திற்காக 2016 ஆண்டிற்காக ரூபா 800 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆண்டின் போது ரூபா 1084 மில்லியன் தொகை திறைசேரியில் இருந்து பெற்று செலவிடப்பட்டிருந்தது. சபையின் திட்டமிடல் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் புனர்நிர்மாணம் செய்வதற்கு இலக்காக இருந்த 1539 பஸ் வண்டிகள் அதாவது 65 சதவீதம் புனர்நிர்மாணம் செய்வதற்கு இயலாதிருந்துள்ளது. எதிர்பார்த்த இலக்கினை நெருங்குதல் தொடர்பான விரிவான தகவல்கள் கீழே காணப்படுகின்றது.

| | 2016 ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|
| **விவரம்** | **இலக்கு** | **உள்ளவாறு நிலைமை** | **நெருங்க இயலாது போன எண்ணிக்கை** |
| என்ஜின் தொகுதிகள் | 1,200 | 419 | 781 |
| ஜியர் பெட்டி | 900 | 195 | 705 |
| பஸ் போர்ட் | 264 | 211 | 53 |
| கூட்டுத்தொகை | 2,364 | 825 | 1,539 |

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பேருந்து அலுவலகத்தில் கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பான கடை வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் 14 மற்றும் 16 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வாடகை செலுத்தும் தரப்பினரால் மாதாந்தம் வாடகைத் தொகை செலுத்துதல் தொடர்ச்சியாக 03 மாதங்களுக்கு புறக்கணிக்கப்படுமாயின் 03 மாத எழுத்துமூல முன்அறிவித்தலுடன் அந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட முடியும். எனினும், மத்திய பேருந்து அலுவலகத்தில் எல்எச் 32 மற்றும் எல்எச் 34 என்ற கடைகள் மற்றும் மலசலகூட முறைமைக்காக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 450,000 மற்றும் ரூபா 1,978,000 தொகையான வாடகைப் பணம் நிலுவையாகக் காணப்பட்டதுடன், ஆண்டின் போது தொடர்ச்சியாக 03 மாதங்களுக்கு மேல் வாடகைப் பணம் செலுத்தாது புறக்கணித்திருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய பேருந்து அலுவலகத்தில் 58 கடைகளில் 09 கடைகளுக்காக மாத்திரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வாடகை உடன்படிக்கை செல்லுபடியாகக் காணப்பட்டதுடன் மிகுதி வாடகை உடன்படிக்கை காலாவதியாகியிருந்தமையும், அதில் சில உடன்படிக்கைகள் 1970 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. இந்த வாடகை உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் மாதாந்த கடை வாடகைப் பணம் பல்வேறு வீதத்தின் கீழ் 2016 செப்தெம்பர் 08 ஆந் திகதிய 61 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் திருத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அத்திருத்தப்பட்ட வாடகை அறவிடப்படாதிருந்தமையும், புதிய மாதாந்த வாடகைக் கட்டணத்தை தீர்மானிக்கும் போது குறித்துரைத்த கொள்கையொன்று பின்பற்றப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மாதாந்த வாடகைப் பணம் மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மாதாந்த வாடகைப் பணம் என்பவற்றுக்கிடையிலான முரண்கள் 0 சதவீதம் முதல் 403 சதவீதம் வரை காணப்பட்டது.

(ஈ) மின்சார சபையினதும், நீர் வழங்கல் சபையினாலும் வழங்கல்களுக்காக கட்டணம் அறவிடப்படும் கொள்கையின் பிரகாரம் பயன்படுத்தப்படுகின்ற அலகு அளவு அதிகரிக்கும் போது அதிகரித்த வீதத்தில் செலுத்த வேண்டியேற்படுகின்றது. அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது மத்திய பேருந்து அலுவலகத்தால் வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளுக்காக பொருத்தப்பட்டுள்ள உபநீர்மானி மற்றும் உப மின்சார மீற்றர் மூலம் பயன்படுத்தப்படுகின்ற அலகுகளுக்காக சமமான வீதத்தின் கீழ் வாடகையாளர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்காக நீர் மற்றும் மின்சார பட்டியல்களுக்காக வாடகையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணத்தை விட ரூபா 12,117,837 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

| | **2016 ஆம் ஆண்டில் வாடகையாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட தொகை** | **2016 ஆம் ஆண்டில் சபை செலுத்தியுள்ள தொகை** | **2016 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட தொகையை விட மேலதிகமாகச் செலுத்தப்பட்டதொகை** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மின்சாரம் | 2,520,495 | 9,156,041 | 6,635,546 |
| நீர் | 1,197,133 | 6,679,424 | 5,482,291 |
| **மொத்தம்** | **3,717,628** | **15,835,465** | **12,117,837** |

(உ) மத்திய பேருந்து அலுவலகத்தில் இல. எல்எச் 32 என்ற கடை 4,788 சதுர அடியினைக் கொண்டிருந்தது. வாடகையாளரினால் அதில் வளிப்பதனாக்கி செய்யப்பட்டு 10 அறைகளை நடாத்திச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிலையத்திற்கு வழங்கப்பட்ட மூன்று சுற்று மின்சார வழங்கல்களுக்காக 2016 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட மின்சாரக் கட்டணம் ரூபா 175,815 ஆக இருந்த போதிலும், அந்த மின்சாரப் பட்டியல்களுக்காக சபை எவ்வளவு தொகையினைச் செலுத்தியிருந்தது என கண்டறிய முடியாதிருந்ததுடன், அந்த பாதகமான கட்டணக் கொள்கை மற்றும் உடன்படிக்கை நிபந்தனைகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பணிப்பாளர் சபையினால் செயற்பாடற்ற கணக்கு மீதிகளை பதிவழிப்பதற்காக குழுவொன்று நியமிப்பதற்கு 2016 சனவரியில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக அமைச்சு மற்றும் திறைசேரி பிரதிநிதிகளை நியமித்தல் 2017 சனவரி வரை ஒரு வருடம் தாமதமாகியிருந்ததுடன் 2018 ஏப்ரல் இறுதிவரையிலும் உரிய குழுவினால் அதற்காக சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட மேலதிக தேவையின் கீழ் டயர் வழங்கப்படுகின்ற நிறுவனத்தால் டயர்களில் உற்பத்தி தொடரிலக்கம் குறிப்பிட்டு டயர் காட் பத்திரமொன்று இலங்கை போக்குவரத்துச் சபைக்கு விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டிற்காக சியெட் கம்பனியிலிருந்து கொள்வனவு செய்த 19,094 டயர்களுக்காக டயர் காட் பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக டயர் கொள்வனவு செய்வதற்கு சியெட் களணி சர்வதேவ டயர் கம்பனியுடன் 2016 மே மாதம் 06 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அதற்குப் புறம்பாக வேறு கம்பனியிலிருந்து ரூபா 2,071,847 பெறுமதியான 34 புதிய டயர்களும், 1925 கைப்பட்டிகளும் மற்றும் 195 டியூப்புக்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஐ) டிப்போக்களுக்குரிய பேரூந்து வண்டிகளுக்காக தேவையான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்யும்போது பிரதான அலுவலகம் மூலம் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டு கடந்த ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், வழங்குனரால் டிப்போவிற்கு வழங்கப்பட்ட உதிரிப்பாகங்களுக்குரிய விலைப்பட்டியல் பத்திரம் மற்றும் டிப்போ களஞ்சியத்திற்கு பொருட்கள் கிடைத்தமைக்கான சான்றிதழ், டிப்போவினால் பிரதான அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கொள்வனவுகள் முற்பணக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்பண மீதி ரூபா 1,907,294,471 மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,635,847,558 ஆக தீர்க்கப்படாத மீதி காணப்பட்டதுடன் முற்பணத்தை தீர்த்தல் தாமதமின்றி மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஒ) பிரதான அலுவலகத்தின் களஞ்சியத்தில் உத்தியோகபூர்வ வாகனங்களின் லொக்புத்தகம், Repair Kit Injector Pump என்பவற்றை உள்ளடக்கிய 140 களஞ்சிய விடயங்களை பயன்பாட்டிற்கு எடுத்தல் பொருத்தமானதாக இருந்த போதிலும், எப்போதாவது விநியோகிக்கப்படுகின்ற பொருளாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 17,159,995 ஆகும். 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பிரதான அலுவலகத்தில் மாத்திரம் பல்வேறு நோக்கங்களுக்காக 21 நடைமுறைக் கணக்குகள் பேணப்பட்டிருந்ததுடன் வரவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 6,822,431,518 ஆகவும் செலவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 6,815,368,696 ஆகவும் கணக்குளுக்கிடையே பணம் மாற்றப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் நிதிச்செயற்பாடுகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு நலிவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கதிர்காமம் ஓய்வு மண்டபத்தின் கட்டம் 02 இன் நிர்மாணக் கிரயம் ரூபா 13,167,038 ஆக இருந்ததுடன் அந்த நிர்மாணக் கிரயத்தில் ரூபா 7,912,368 தொகை செலுத்தப்பட்டிருக்கும் போது ஒப்பந்தகாரர் நிர்மாண நடவடிக்கைகளை இடைநடுவில் நிறுத்தியிருந்தார். எனினும், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம்

ரூபா 658,351 தொகையான செயலாற்றல் பிணைமுறி 2013 திசெம்பர் 08 ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன் அது காலாவதியாகுவதற்கு முன்னர் காசாக மாற்றப்படாமையினால் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சாரதி பயிற்சி பாடசாலை வருடாந்தம் நட்டத்துடன் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. அதற்காக சாரதி விரிவுரையாளருக்கு ஒப்பாக ஏனைய பதவியணியினரும் மிகையாக நியமிக்கப்பட்டிருந்தனர். அதன் காரணமாக அந்த சாரதி பயிற்சி பாடசாலைகளில் வருமானத்தை விஞ்சி சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. பொத்துஹெர மற்றும் களுத்துறை சாரதி பயிற்சிப் பாடசாலைகளில் 2016 ஆம் ஆண்டின் வருமானம், சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரம் காண்பிக்கப்படுகின்றது.

| | **சாரதி பயிற்சி பாடசாலை பொத்துஹெர** | **சாரதி பயிற்சிப் பாடசாலை களுத்துறை** |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் நட்டம் ரூபா | 21,192,032 | 32,629,646 |
| 2016 ஆம் ஆண்டின் வருமானம் ரூபா | 8,769,875 | 7,617,748 |
| 2016 ஆம் ஆண்டின் சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு ரூபா | 14,077,682 | 21,494,112 |
| நியமிக்கப்பட்ட மொத்த பதவியணியினர் | 21 | 33 |
| நியமிக்கப்பட்ட பதவியணியில் இருக்கின்ற விரிவுரையாளர்களின் எண்ணிக்கை | 04 | 06 |

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 97,462,160 கிரயமான 143 பேரூந்து வண்டிகள் 2002 ஆம் ஆண்டின் போது வெஸ்கோ நிறுவனத்திற்கு திருத்த செயற்பாடுகளுக்காக அனுப்பப்பட்டிருந்தது. எனினும், வெஸ்கோ நிறுவனம் இதுவரையிலும் செயற்படுநிலையில் காணப்படாமையினால் உரிய பேரூந்து வண்டிகளை மீண்டும் சபைக்கு பெற்றுக்கொள்ளல் தொடர்பான ஆபத்தொன்று காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் தகவல்களின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 3,695,712,194 தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்பு பணமாக ஊழியர் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட போதும் அப்பணம் உரிய பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படாமையினால் உரிய காலத்தில் கிடைக்க வேண்டிய வட்டியின் அளவு ஊழியர்களுக்கு கிடைத்திருக்கவில்லை.

## 4.5 வெளிப்படையான மோசடிகள்

2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை கம்பனி ஒன்றினால் இலங்கை போக்குவரத்து சபைக்குரிய டிப்போக்களுக்காக நெப்கோ பெயரின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட துணுக்கொல வழங்குனரினால் சபைக்கு வழங்காதிருக்கும் போது வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு அந்த நிறுவனத்திற்கு அறவிடவேண்டிய பணப் பெறுவனவாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் சபையினால் ரூபா 127,150,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 இன் பிரகாரம்

துணுகொல கிடைத்தமை உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் உரிய உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உரிய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு பேரூந்து வண்டிக்காக நாளொன்றிற்கு ரூபா 3,000 வீதம் டிப்போவிலிருந்து பிரதான அலுவலகத்திற்கு பணம் அனுப்ப வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் டிப்போவிலிருந்து ரூபா 1,541,834,030 தொகை பெறவேண்டியிருந்தது.

(ஆ) டிப்போவினால் நிதி சரியான பிரகாரம் அனுப்பப்படாமையின் காரணமாக பிரதான அலுவலகத்தால் பேரூந்து வண்டி குத்தகை தவணைப் பணம் செலுத்துதல் தாமதிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 67,076,082 தொகையான தாமதக் கட்டணமும் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(இ) குத்தகைத் தவணை மற்றும் தாமதக்கட்டணம் செலுத்துவதற்கு போதியளவான பணம் சபைக்கு இல்லாமையினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 770,542,961 கடன் தொகை பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கடனுக்கான வட்டியாக சபையினால் ரூபா 43,587,110 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.7 இனங்காணப்பட்ட நட்டம்**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் முறையே ரூபா 143,942,364 மற்றும் ரூபா 3,798,120 தொகையான மிகைக் கட்டணத்தை செலுத்த வேண்டியிருந்தது.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 9 ஆவது பந்திக்கு இணங்க இலங்கை போக்குவரத்துச் சபைக்காக நிறுவனக் கட்டமைப்பு, ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்வு நடைமுறை என்பன தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 11 மாத தாமதத்தின் பின்னர் அதாவது 2018 சனவரி 23 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலத்தில் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை விரிவாக இனங்கண்டு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் சபையின் நிதி நிலைமையை கவனத்தில் கொள்ளாமல் அடைய முடியாத நோக்கங்கள் மற்றும் இலக்குகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருந்தது.

## 5.3 பெறுகைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 4.2.1(ஆ) இன் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகைச் செயற்பாடுகள் பிரதான பெறுகைத் திட்டத்தில் நிரல்படுத்தப்பட்டு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட பிரதான பெறுகைத்திட்டம் அதற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 இன் பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் டயர் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான கொள்வனவுகளை ஒப்பீடு செய்தபோது குறைவாகக் கொள்வனவு செய்திருந்ததுடன் அது 56 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

| டயர் வகை | பெறுகைத்திட்டத்தின் பிரகாரம் டயர்களின் எண்ணிக்கை | உள்ளபடியான டயர்களின் எண்ணிக்கை | வேறுபாடு | வேறுபாடு சதவீதமாக |
|---|---|---|---|---|
| 750 x 16 | 72 | - | 72 | 100 |
| 825 x 20 | 4,800 | 1,074 | 3,726 | 78 |
| 900 x 20 | 36,000 | 15,924 | 20,076 | 56 |
| 1000 x 20 | 912 | 202 | 710 | 78 |
| மொத்தம் | 41,784 | 17,200 | 24,584 | |

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை போக்குவரத்துச் சபையினால் 2016 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் தகவல்களையும் 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற தகவல்களையும் ஒப்பீடு செய்வதற்கு முடியாத பிரகாரம் ஒன்றுக்கொன்று வித்தியாசமான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையினால் பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே முரண்கள் காணப்படுகின்றதா என ஆராய்ந்து பார்க்காதிருந்தமை மற்றும் அது நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்படாதிருந்தமை என்பன அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் சபையின் வருமானம் மற்றும் செலவினங்களின் 15 விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமதிக்கும் இடையே 11 சதவீதம் முதல் 101 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் துஷ்பிரயோகங்களுக்கு வழியமைக்காத வகையில் சுற்றாடலில் கழிவுப்பொருட்களை அகற்றுதல், புகைத்தல் அல்லது எரித்தல் போன்ற சகல செயற்பாடுகளுக்காகவும் மேற்கூறிய பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று பெறப்பட்ட வேண்டும். அந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற சகல மோட்டார் வாகனங்களையும் புகைப் பரிசோதனைக்கு உட்படுத்தி தரச் சான்றிதலொன்று பெறப்படவேண்டியிருந்ததுடன் கட்டளை இல. 09 இன் பிரகாரம் மோட்டார் வாகனம் என்பதில் பேரூந்து வண்டியும் உள்ளடங்குவதாகக் குறிப்பிடப்பட்டமையால் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேரூந்து வண்டிகளுக்காகவும் புகைச் சான்றிதழ் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், 10 பிரதேச அலுவலகங்களின் தகவல்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் மொத்த பேரூந்து வண்டிகள் 6729 இல் 800 பேரூந்து வண்டிகள் மாத்திரம் புகைச்சான்றிதழ் பெற்றிருந்தது. அதன்பிரகாரம் மொத்த பேரூந்துவண்டிகளின் எண்ணிக்கையில் 88 சதவீதம் புகைச்சான்றிதழ் பெறப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சகல வாகனங்களுக்கும் சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்ற டிப்போவினால் அதற்குரிய அனுமதிப்பத்திரம் பெறப்படவேண்டியிருந்தமை 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலமும், 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரமும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை போக்குவரத்துச் சபையின் 107 டிப்போக்களில் 07 டிப்போக்கள் மாத்திரம் அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) சபையின் பேரூந்து வண்டிகளின் விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்படாமை. |
| | (ii) சொத்துக்களின் பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையில் பொறுப்பளிப்புத் தன்மை கையளிக்கப்படாமை |

(iii) சொத்துக்களின் கொள்வனவுகளிலும் கணக்கீடு செய்தலிலும் உள்ளகக் கட்டுப்பாடு நலிவாக இருந்தமை

(iv) வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளாமை

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(i) பெறவேண்டிய பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை

(ii) நிதிப் பிரிவினால் தேவையின்றி வங்கிக் கணக்குகள் பேணிச் செல்லப்பட்டமை.

(iii) சரியாக வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்படாமை.

(இ) முற்பணத்தைத் தீர்த்தல்

(i) முற்பண பதிவேடு பேணப்படப்படாமை.

(ii) பெறப்பட்ட முற்பணத்திற்குரிய பணிகள் நிறைவு பெற்றதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

(iii) பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் மேற்பார்வை செய்யப்படாமை

(iv) காலரீதியில் ஒப்பீடு மற்றும் தீர்த்து வைத்தல் மேற்கொள்ளாமை.

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு

(i) களஞ்சியத்திற்குக் கிடைக்கின்ற பொருட்கள் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படாமை.

(ii) நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.

(iii) பிரதான அலுவலகத்திலிருந்து கட்டளை இடப்பட்டு வழங்குனர்களினால் நேரடியாக டிப்போவிற்கு வழங்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக தகவல்கள் பிரதான அலுவலகத்திற்கு அறிக்கை இடாமை மற்றும் இணக்கம் செய்யப்படாமை.

(iv) களஞ்சியத்தின் தரவுகள் மற்றும் டிப்போக்களின் தரவுகள் இணக்கம் செய்யப்படாமை.